4. உரிமைப் பிரச்சினை.

வரவு-செலவுத் திட்டம் பற்றி ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை ஒளி-ஒலி அமைப்புகள் வெளியிடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்கள் நிதிநிலை அறிக்கை பற்றி தான் நேற்று முன்தினம் தெரிவித்த கருத்துக்கள், மற்ற கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தெரிவிக்கப்பட்டிருந்தும் கூட— தான் தெரிவித்த கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை என்று, தன்னுடைய உரிமை பறிக்கப்பட்ட வகையில் இதுபற்றி அவையில் எழுப்ப வேண்டுமென்று என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி நான் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் எழுத இருக்கிறேன். எழுதி அவர்களிடத்திலிருந்து பதில் பெற்று அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையில் என்ன செய்யலாம் என்பதை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி 1-ன் கீழ்........

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) கோயம்புத்தூர், திருப்பூர் பகுதிகளில் இந்து முஸ்லீம் அமைப்புக்களைச் சார்ந்தவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்களையொட்டிச் சிலர் கொலையுண்டது மற்றும் காயமுற்றது தொடர்பாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்ததற்குப் போய்விட்டேன். உட்காருங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கவில்லை. அதாவது, தயவுசெய்து, நீங்கள் எதுபற்றியும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிற பிரச்சினையை நான் வந்து........

டாக்டர் தே. குமாரதாஸ் : இது ஒரு சென்ஸிட்டிவ் இஷ்யூ.